
# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

கிறிஸ்துவின் வசனம்
WORD OF CHRIST

மரம் 4 ஆகஸ்டு 1995 கனி 1

## நீ எங்கே இருக்கிறாய்?

### Where art thou?

தேவன் ஆதாமை கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய்? என்றார் அதற்கு அவன் நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்தில் கேட்டு, நான் நிர்வாணியாயிருக்கிறதினால் பயந்து, ஒளித்துக கொண்டேன் என்றான். ஆதி 3:1-10 பிரியமான சகோதரனே! சகோதரியே! உங்களையும் நம் தேவனாகிய கர்த்தர் கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய் என்று கேட்டால் நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? கர்த்தருடைய சந்நிதிக்குள் இருந்து கொண்டு இதோ சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சாமுவேல் தீர்க்கதரிசியைப் போல் சொல்லுவீர்களா? அல்லது ஆதாமை போல் பயந்து கொண்டு கர்த்த ருடயை சந்நிதிக்கு, விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டேன் என்று சொல்லுவீர்களா? நீங்கள் எந்நிலமையில் இருக்கிறீர்கள்? இன்னும் பாவத்திலே ஜீவித்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக அக்கினிக்குள் தள்ளப்படுவீர்கள். நிரந்தர வேதனை உங்களை ஆட்கொள்ளும்.

இவ்வுலகத்திலே இருவழிகள் உண்டு. ஒன்று பரிசுத்தத்தைத் தெரிந்துகொள்வதும், மற்றொனறு அசுத்தத்திற்குச் செல்வதும் இதிலே நீங்கள் எங்கே இ ருக்கிறீர்கள் என்று நிதானித்து பாருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களை பரிசுத்தப்படுத்தவும், பரிசுத்தத்திற்கு அழைத்துச்செல்லவுமே வந்தார். மீண்டும் வருவார் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தத்தின் மேல் பரிசுத்த மடையுங்கள். ஆதாமுடன் தேவன் நேரடியாகப் பேசினார் அவன் நடக்க வேண்டிய வழியைக் கற்றுக் கொடுத்தார். அப்படி இருக்கும் பட்சத்தில் பிசாசு உள்ளே புகுந்து ஆதாமையும், ஏவாளையும் தேவ வார்த்தைக்கு விரோதமாக செயல்படத் தூண்டியதை வாசிக்கின்றோம். இக்கடைசி காலங்களிலும் அதே போல் நடந்து வருவதை நாம் பார்க்கமுடிகிறது. தினமும் வேதம் வாசித்து, ஒழுங்காக ஆராதனைக்கும் சென்று வரும் தேவப் பிள்ளைகளிடமும் பிசாசு தேவ வார்த்தைகளைப் புரட்டி பிரிவினைகளை உண்டாக்குகின்றான் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையுள்ள ஜீவியத்தைச் செய்யவேண்டும்.

பிசாசு ஒருவனை நரகத்திற்கு நேராக வழிநடத்துகிறான். ஏனென்றால் அவனுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டது நரக அக்கினி. ஆகையால் தேவப்பிள்ளைகளையும் அவ்வழியே இழுக்கப் பார்க்கிறான். எனவே நாம் விழித்துக் கொண்டு எங்கே இருக்கிறோம் என யோசிக்க வேண்டும். சிலர் நாம் எங்கிருந்தால் என்ன! எங்கிருந்து கொண்டும் கர்த்தரைத் துதிக்கலாம் என்று நினைக்கிறார்கள். கர்த்தரைத் துதிப்பது சபையோடு சேர்ந்து துதிக்க வேண்டும், ஒருமனப்பட்டவர்களாகத் துதிக்க வேண்டும். அதைவிடுத்து மதுபானம் விற்பனை செய்து கொண்டு துதிக்கலாம், சகல அசுத்தங்களைச் செய்து கொண்டும் துதிக்கலாம் என்று நினைக்கிறார்கள். கர்த்தரைத் துதிப்பதற்கு இருப்பிடமும் தூய்மையாக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. நமதாண்டவராகிய இயேசுவும் மலைக்கு சீஷர்களுடன் சென்று அமைதியான இடத்தில் ஜெபித்தார். ஆகையால் பிரிய நண்பரே! நீ எங்கே இருக்கிறாய்? அசுத்தக்கறைகளோடு. அசுத்த எண்ணங்களோடு, தவறான இடத்தில் தவறான சினேகிதர்களோடு உனது ஜீவியத்தைக் கழித்துக் கொண்டு வருகிறாயா? சற்று சிந்தி! உன் வாழ்நாள் மிகக்குறுகியதே! இதில் நீ பரிசுத்தக் கர்த்தரைத் தரித்துக் கொள்ள வேண்டும். தேவசந்நிதியில் அனுதினமும் காணப்பட வேண்டும். சகல மக்களுக்கும் சாட்சியாக ஜீவிக்க வேண்டும் இதுவே நீ செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நமதாண்டவர் உன்னை அழைக்க வரும்போது தம்மோடு சேர்த்துக் கொள்ளுவார். இன்றே தேவசந்நிதியை விட்டு விலகாமலிருக்கப் பிரயாசப்படு.

ஆமென்

★ சபைச் செய்தி

வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரால் நடத்தப்படும் சுவிசேஷக் கூட்டத்திற்கு யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நாள் 30-8-95

நேரம்: மாலை 6-00 மணி

இடம்: கிறிஸ்துவின் சபை சார்பதிவாளர் அலுவலக சந்து
கணவாய்ப்பட்டி ரோடு வத்தலக்குண்டு -624202
DGL அண்ணா மாவட்டம்

★ ஜூலை மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

1. சகோதரி: J. மேரி எலிசபெத் கலைவாணி வதிலை
2. சகோ R. ஜெபர்சன் ஜேக்கப், K.K. Df
3. சகோS. வின்செண்ட், கட்டபொம்மன் மாவட்டம்.

சிறுவர்கள்:

1. M. பச்சைக்கண்ணன் காளையார்குறிச்சி
2. S. ஜான்வெஸ்லி ...
3. A. ஆனந்தி சின்னுபட்டி
4. D. ரமேஷ் கோவை
5. S. கோபி வதிலை

★ ஜீலை மாத இதழின் விடைகள்

1. இலச்சையை நீதி 10:5
2. ஐயோ ஏசா 45:10
3. என் யோவா 14:23
4. விக்கிரகங்களால் அப் 17:16
5. பவுல் ரோ 8:36
6. நாய்
7. அக்கினியிலே
8. பென்னம்மி
9. ஏதோம்
10. கல்லெறிந்து

சிறுவர் விடைகள்

1. அன்பாகவே 1யோவா 4:16
2. உண்மையினாலும் 1யோவா 3:18
3. ஜீவன் 1யோவா 5:12
4. உலகத்திலுள்ளவைகளிலும் 1யோவா 2 15
5. இரத்தம் 1யோவா 1:7

★ இம்மாத வேத அறிவுப்போட்டி

1. நீதிமான் எதைப்போல் செழித்து எதைப்போல் வளருவான்?
2. கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றவன் யார்?
3. எந்த பள்ளத்தாக்கில் ஒரே குலையுள்ள ஒரு திராட்சக் கொடியை அறுத்து ஒரு தடியிலே இரண்டு பேர் தூக்கிக் கொண்டு வந்தார்கள்?
4. பெதஸ்தா குளத்திற்கு எத்தனை மண்டபவங்கள் உண்டு?
5. அஞ்ஞானிகள் பலியிடுகிறதை யாருக்கு அல்ல? எவைகளுக்கே பலியிடுகிறார்கள்?
6. ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்று கர்த்தர் யாரிடம் சொன்னார்?
7. கர்த்தரை விட்டு விலகுகிற இயத்துள்ள மனுஷன் எப்படிப் பட்டவன்?
8. எந்த மலையில் ஜெபிக்கும் போது ஆண்டவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தது?

9 உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது?

10. ஆதாமும் ஏவாளும் எதற்கு விலகி தோட்டத்தில் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்?

சிறுவர்கான போட்டி:

(II, III யோவான் எழுதிய புத்தகத்திலிருந்து கோடிட்ட இடங்களை நிரப்புக)

1. நாம் அவருடைய............... நடப்பதே அன்பு
2. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் .................. எவனும் தேவனை உடையவனல்ல.
3. இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும் அவனுக்கு............... சொல்லாமலும் இருங்கள்.
4. தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சிபெற்றதுமல்லாமல்........ ............... நற்சாட்சி பெற்றவன்.
5. உனக்குச்.....................உண்டாவதாக.

மேற்கண்ட முதல் ஐந்து கேள்விகளுக்கு வேத ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து பதில் மட்டும் இம்மாதம் 25-ம் தேதிக்குள் எமக்கு வந்துசேரும்படி அனுப்பவும். தயவுசெய்து ஒருவர் விடையை ஒருவர் பார்த்து எழுதாதீர்கள்.

ஆசிரியர்

---

## விலையேறப் பெற்ற பரிசு

### [பரிசுத்த முழு வேதாகமம்]

## யாருக்கு?

கடந்த ஆகஸ்டு '94 முதல் ஜூலை '95 வரை வெளியிடப்பட்ட வேத அறிவுப் போட்டிகளில் தொடர்ந்து கலந்து கொண்டு 8 முறை வெற்றி பெற்றவர் சகோதரி J. மேரி எலிசபெத் கலைவாணி வத்தலக்குண்டு அவர்களுக்கே!

---

# ஆசிரியர் கடிதம்

வாசகர்களுக்கு,

உயிர்த்தெழுந்த உலக இரட்சகரின் நாமத்தில் வாழ்த்துக்கள். நான்காவது ஆண்டில் இவ்விதழ் அடியெடுத்து வைக்க கர்த்தர் கிருபை செய்தமைக்காக அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக! தொடர்ந்து இவ்விதழை பெற்று வரும் உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! இவ்விதழை குறித்த உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கிறோம். உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் இவ்விதழை அறிமுகம் செய்யுங்கள். வேத அறிவுப் போட்டிகளில் நீங்களும்' உங்களது குழந்தைகளும் கலந்து கொண்டு வேத அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள். தொடர்ந்து இவ்விதழ் வெளியிட ஜெபித்து கொள்ளுங்கள். ஆண்டவரின் அருட்பணிக்காக

இவ்விதழை குறைந்த கட்டணத்தில் அச்சிட்டு உதவி வரும் ''சாந்தி பிரிண்டர்ஸ்'' உரிமையாளர் C. பாண்டியராஜன் B.Sc மற்றும் அச்சகத்தார்களுக்காகவும் நம் தேவனிடம் ஜெபித்துக் கொள்ளுங்கள். ஆண்டவரின் கிருபை சதாகாலமும் உங்களோடிருப்பதாக!

ஆமென்!

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/19

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்பட்டி ரோடு
வத்தலகுண்டு-624202

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
**Batlagundu-624202.**
S. India

Edited and publised by B. Arjunan M.A.,A.Bs. on behalf of church of Christ 2.2.63A/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc. SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.